உறுப்பினர் செயலர், திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழுமம், திருச்சிராப்பள்ளி
அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு ரா.செல்வராஜ் பி.இ.,

ந.க.எண். 1855/2017 திஉதிகு 2 நாள் 31.1.2018

பொருள்: ஒப்புதல் அளிக்கப்படாத மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் – திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டப் பகுதி–திருச்சிராப்பள்ளி மாவட்டம்–ஸ்ரீரங்கம் வட்டம்–முத்தரசநல்லூர் கிராமம்–புல எண்.84/5ஏ மற்றும் 84/5பி–பகுதியில் அமையும் 7044.05 ச.மீ அல்லது 75794 ச.அடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள ஒப்புதல் அளிக்கப்படாத குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி, கொள்கை அளவில் ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை

1. அரசாணை எண்.78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ 4 (3) நாள் 4.5.2017
2. அரசாணை எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ 4 (3) நாள் 13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண் .13193/2017/LA2 நாள் 30.10.2017 மற்றும் நாள் 07.11.2017.
4. மனுதாரர் திரு ஏ.அருணாசலம் என்பவரது விண்ணப்பம் நாள் 13.10.2017

உத்தரவு

திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டப் பகுதி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், முத்தரசநல்லூர் கிராமம், புல எண்.84/5ஏ மற்றும் 84/5பி பகுதியில் அமையும் 7044.05 ச.மீ அல்லது 75794 ச.அடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள ஒப்புதல் அளிக்கப்படாத குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 1 மற்றும் 2ல் கண்ட அரசாணைகளின் அடிப்படையில் வரன்முறைப்படுத்தப்பட்டு, குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ (வரன்முறை)/திஉதிகு எண்.22/2018 என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் கொள்கை அளவில் மனைப்பிரிவு ஒப்புதல் (In Principle Approval) வழங்கப்படுகிறது.

A. அருணா

Scanned by CamScanner

நிபந்தனைகள்

**1. கூராய்வுக் கட்டணம் (Scrutiny fee):**

பார்வை 1 மற்றும் 2ல் கண்ட அரசாணைகளில் கண்டுள்ளபடி மனைப்பிரிவு அபிவிருத்தியாளர்கள்/தனி மனை உரிமையாளர்களிடம் மொத்தம் 46 மனைகளுக்கான கூராய்வுக் கட்டணம் ரூ.500/– வீதம் ரூ.23,000/– இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது.

**2. வரன்முறைக் கட்டணம் (Regularisation Charge):**

பார்வை 2 ல் கண்ட அரசாணையில் கண்டுள்ளபடி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒவ்வொரு மனைக்கும் அதன் பரப்பளவில் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/– வீதம் கணக்கீடு செய்து அத்தொகையினை கீழ்காணும் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்ட பின்னரே மனைப்பிரிவில் அமையும் மனைகளை வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

கணக்குத் தலைப்பு
0217-Urban Development
60-Other Urban Development Schemes-
800 Other Receipts-
AT Receipt under Regularisation Charges of Unapproved Layout and Plots-DTCP (D.P.Code : 0217-60-800-AT-0007)

**3. வளர்ச்சிக் கட்டணம் (Development Charge):**

பார்வை 2–ல் கண்ட அரசாணையில் கண்டுள்ளபடி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒவ்வொரு மனைக்கும் அதன் பரப்பளவில் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/– வீதம் கணக்கீடு செய்து மனுதாரரிடமிருந்து பெறப்பட்டு உள்ளாட்சியால் தனி கணக்கில் வரவு வைத்தல் வேண்டும்.

சிறப்பு நிபந்தனைகள்

1. இம்மனைப்பிரிவு அமையும் நிலத்தின்மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம் கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும், மேற்படி நிலமானது தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் மற்றும் நில சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை எனவும் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

Scanned by CamScanner

2. வரன்முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவின் சாலைகள் மற்றும் பூங்கா இடமானது, பார்வை 2ல் கண்டுள்ள அரசாணையின்படி உள்ளாட்சியின் உரிமைக்குட்பட்டது என்பதால் சாலைகள் மற்றும் பூங்கா இடங்களை சம்பந்தப்பட்ட சார் பதிவாளரால் உரிய உள்ளாட்சி பெயரில் பதிவு செய்யப்பட வேண்டும்.

3. வரன்முறைப்படுத்தப்பட்டு, தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின் சாலைகள், பூங்கா ஒதுக்கீடுக்கான நிலங்களை வருவாய்துறை ஆவணங்களில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி பெயரில் உட்பிரிவு செய்யும் பொருட்டு சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பப்பட வேண்டும்.

4. நில உரிமம் குறித்து உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும். இம்மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால், பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும் .

5. பார்வை 1ல் கண்டுள்ள அரசாணைகளின் விதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு பகுதி எதுவும் மனை வரன்முறைப்படுத்துதலுக்கு உட்படவில்லை என்பதை உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

6. இம்மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் சட்டப்பூர்வமாக, கொள்கையளவில் வரன்முறைப்படுத்தப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் அளிப்பதன் மூலம் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. எனவே மனை உரிமையாளர்கள் சொத்தின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். வேறு யாரேனும் உரிமை கோரினால் அதற்குப் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ள வேண்டும். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

7. இம்மனைப்பிரிவில் அமையும் தனி மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்ட விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் செயலாணை மற்றும் வரைபடங்கள் பெறப்பட்டமைக்கு ஒப்புகைச் சான்று அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்படுகிறது.

உறுப்பினர் செயலர்,
திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழுமம்

31/01/18

இணைப்பு
மனைப்பிரிவு வரைபடம் : 2

Scanned by CamScanner

பெறுநர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம்,
அந்தநல்லூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்

<u>நகல்</u>

1. திரு திரு ஏ.அருணாசலம், த/பெ. திரு ஆதிமூலம் பிள்ளை, எண்.12, நேரு முதல் தெரு, எடமலைப்பட்டிபுதூர் திருச்சிராப்பள்ளி 620 012.

2. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3. தொழில் நுட்ப வைப்பகம் 1

4. உதவி இயக்குநர் (நில அளவை)
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருச்சி.

சாலை மற்றும் OSR பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு

ஸ்ரீரங்கம், திருச்சிராபபள்ளி–6

6. சார் பதிவாளர்,
ஜாயின்ட் I and II,
டவுன் ஹால்,
திருச்சிராப்பள்ளி

சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சி பெயரில் பதிவு செய்யும் பொருட்டு

Scanned by CamScanner

முத்தரசநல்லூர் ஊராட்சியின் தனி அலுவலர்/அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்.
முன்னிலை:- திருமதி சே. மல்லிகா.

ந.க. ஆ3/351/2018 நாள்:- 02.2018.

பொருள்:- ஒப்புதல் அளிக்கப்படாத மனைப் பிரிவு வரன்முறைப் படுத்துதல்- அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம்-முத்தரசநல்லூர் ஊராட்சி-நி.அ எண்:- 84/5ஏ, மற்றும் 84/5பி -ல் அமைந்துள்ள ஒப்புதல் அளிக்கப்படாத குடியிருப்பு மனைப் பிரிவினை வரன்முறைப்படுத்திட செலுத்தப்பட்ட தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டவை ஆகியவற்றை பரிசீலித்து வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:-
1) திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.1855/2017/ திஉதிகு-2/ நாள்:- 31.01.2018.
2) இவ்வலுவலக அறிவிப்புக் கடிதம் ந.க. ஆ3/351/2018 நாள்:- 08.02.2018.
3) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மண்டலம்-1 தல ஆய்வு அறிக்கை.
4) மனுதாரர் திரு ஏ. அருணாசலம், என்பவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் கடிதம் நாள்:- 16.02.2018.

000000

ஆணை:-

பார்வை 1-ல் காணும் திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் அவர்களின் நடவடிக்கைகளின் வாயிலாக அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த முத்தரசநல்லூர் ஊராட்சியில் உள்ள முத்தரசநல்லூர் கிராமத்தைச் சார்ந்த நில அளவை எண்:-84/5ஏ, மற்றும் 84/5பி -ல் 75794 சதுர அடி கொண்ட அல்லது 7044.05 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடத்தில் ஒப்புதல் அளிக்கப்படாத குடியிருப்பு மனைப் பிரிவிற்கு கொள்கை அளவில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பார்வை 1-ல் காணும் நடவடிக்கைகளில் 7ஏ,10,11,14ஏ,15,16,16ஏ,18,19,20,21,23,24,25,25ஏ,27, 28,28ஏ,28பி,29,30,31,32,33,34,37,38,39,40,41,42, மற்றும் 43 எண்ணுள்ள விற்கப்படாத 32 மனைகள் மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள22,34ஏ, மற்றும் 36 எண்ணுள்ள 3 மனைகள் ஆகியவற்றின் மொத்தம் 47521 சதுர அடி கொண்ட அல்லது 4416.0 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட 35 மனைகளுக்கு மட்டும் வளர்ச்சிக் கட்டணமும், வரன்முறைக் கட்டணமும் வசூலிக்கப்பட்டுள்ளது.

A-அ[signature]

Scanned by CamScanner

பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக அறிவிப்புக் கடிதம் வாயிலாக, கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆவணங்களையும், ஆதாரங்களையும் வழங்கிட மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

பார்வை 3-ல் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மண்டலம் 1 தனது தலப் பார்வை அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். அதில் அவர் குறைகள் ஏதும் தெரிவிக்கவில்லை. பார்வை 4-ல் காணும் கடிதத்துடன், இவ்வலுவலக அறிவிப்புக் கடிதம் வாயிலாக கோரப்பட்டுள்ள ஆவணங்களையும், ஆதாரங்களையும் மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களையும், ஆதாரங்களையும் பரிசீலித்ததன் அடிப்படையிலும், உரிய அரசாணைகளின்படியும், பார்வை 1-ல் காணும் திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் அவர்களால் கொள்கை அளவிலான ஒப்புதலின் அடிப்படையிலும், **முத்தரசநல்லூர்** ஊராட்சியில் உள்ள **முத்தரசநல்லூர்** கிராமத்தைச் சார்ந்த நில அளவை எண்:- **84/5ஏ, மற்றும் 84/5பி** -ல் **75794** சதுர அடி கொண்ட அல்லது **7044.05** சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவில் **7ஏ,10,11,14ஏ,15,16,16ஏ,18,19,20,21,23,24,25,25ஏ,27,28,28ஏ,28பி,29,30,31,32,33,34,37,38, 39,40,41,42,** மற்றும் **43** எண்ணுள்ள விற்கப்படாத **42913** சதுர அடி கொண்ட அல்லது **3986.71** சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட **32** மனைகளை வரன்முறை செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

பார்வை 1-ல் காணும் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் அவர்களின் நடவடிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் இச்செயல்முறை ஆணைகளுக்கும் பொருந்தமானதாகும்.

இணைப்பு:- வரைபட நகல்-1

20/2/18

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
ஊராட்சி ஒன்றியம், அந்தநல்லூர்.

20/2/18

பெறுநர்
திரு ஏ. அருணாசலம், த/பெ. ஆதிமூலம் பிள்ளை,
எண்:- 12, நேரு முதல் தெரு,
எடமலைபட்டி புதூர்,
திருச்சிராப்பள்ளி - 620 012.

நகல்:- உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், திருச்சிராப்பள்ளி.
நகல்:- வட்டாட்சியர், ஸ்ரீரங்கம் வட்டம்.
நகல்:- சார் பதிவாளர், ஜாயின்ட் I and II, டவுன்ஹால், திருச்சிராப்பள்ளி.
நகல்:- உதவி இயக்குநர், (நில அளவை), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி.
நகல்:- திருச்சிராப்பள்ளி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்:- ஊராட்சி செயலாளர், முத்தரசநல்லூர் ஊராட்சி

Scanned by CamScanner